IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS.No.31/2005 Date: 18.06.2025

DW1- கோமதி

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்து சேவிக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சேவிக்கவுண்டருக்கு குண்டியாகவுண்டர், பெரியண்ணகவுண்டர் ஆகியோர் மகன்கள் என்றால் சரிதான். குண்டியாகவுண்டருக்கு பெருமாள், வீரப்பன், அபிமன்யு ஆகியோர் மகன்கள் என்றால் சரிதான். அவரது மனைவி பெயர் கந்தாயம்மாள். அவர் 12 வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார். பெரியண்ணகவுண்டர் 40 வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். பெரியண்ணகவுண்டருக்கு சேவிகவுண்டர், ஆறுமுகம் ஆகியோர் மகன்கள். 7 முதல் 9 பிரதிவாதிகள் அவரது பெண் மக்கள் என்றால் சரிதான். சேவிக்கவுண்டர் 35 வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார். சேவிக்கவுண்டருக்கு 5 ம் பிரதிவாதி ஒரே வாரிசு என்றால் சரிதான். சேவிக்கவுண்டரின் மனைவி பெயர் கந்தாயி. 1 ம் பிரதிவாதி 5, 6 பிரதிவாதிகளை வாரிசாக விட்டுவிட்டு 25.12.2006 ல் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. நாங்கள் 1 ம் பிரதிவாதிக்கு வாரிசுகள் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதிகளும், 5, 6 பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவிக்கிறார்கள் என்றால் சரியல்ல. நாங்களும் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் உள்ளதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 5 ம் வாதி தாவா சொத்தில் தான் வீடு கட்டி குடியிருக்கிறார் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதியும் தாவா சொத்தில் தான் ஓட்டு வீடு கட்டி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். தற்போது நாங்கள் அந்த வீட்டில் வசிக்கிறோம். நாங்கள் அந்த வீட்டில் வசிக்கிறோம் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. 5, 6 பிரதிவாதிகள் வாடகைக்கு விட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. 5, 6 பிரதிவாதிகள் 1 ம் பிரதிவாதியின் மீது ஜீவனாம்சம் வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். அது தள்ளுபடி ஆகிவிட்டது. அந்த வழக்கு 28.03.2003 ல் தீர்ப்பாகியுள்ளது என்றால் சரியல்ல. அத்தீர்ப்பு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடும்

03.03.2005ல் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. 5, 6 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் மீது REP.No.21/2004 தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. என் அப்பா பெயர் ராமசாமி என்றால் சரியல்ல. என் அப்பா 1ம் பிரதிவாதி இல்லை என்றாலும், நான் ராமசாமிக்கு தான் மகள் என்றாலும் சரியல்ல. அ.வ.எண்.664/1988 வழக்கில் நாங்கள் தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. அந்த தீர்ப்பாணையின் படி பி.கே.பழனிசாமி என்பவரிடம் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. பி.கே.பழனிசாமியிடம் என் அம்மா வாங்கிய கிரைய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகள் என் மீதும் என் தாயார் மீதும் எடப்பாடி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண்.142/2020 என்ற வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1 முதல் 4 வாதிகளுக்கு கூட்டாக 1/8 பாகம் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. நான் பிறந்த ஆண்டு நினைவில்லை. ஆனால் 1980ற்கு முன்பு நடைபெற்றதாக சொல்லும் வாய்மொழி பாகப்பிரிவினை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த பாகப்பிரிவினையும் வாய்மொழியாக ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக இத்தாவாவில் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

(5, 6 பிரதிவாதிகளின் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd/-கோமதி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி